# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# மூன்றாம் பத்து
# அனைத்தையும் வ்யாபிக்கும் விஷ்ணுவான வேங்கடவனிடம் மோக்ஷ பலமான கைங்கர்யம் செய்ய ஆசைப்படுதல்

## முதல் திருவாய்மொழி - முடிச்சோதி
## திருமாலிருஞ்சோலை அழகரது வடிவழகை முற்றும் அநுபவித்தல்

** முடிச் சோதியாய் * உனது முகச் சோதி மலர்ந்ததுவோ? *
அடிச் சோதி நீ நின்ற * தாமரையாய் அலர்ந்ததுவோ? **
படிச் சோதி ஆடையொடும் * பல் கலனாய் * நின் பைம்பொன்
கடிச் சோதி கலந்ததுவோ? * திருமாலே! கட்டுரையே 1

கட்டுரைக்கில் தாமரை * நின் கண் பாதம் கை ஒவ்வா *
சுட்டுரைத்த நன்பொன் * உன் திருமேனி ஒளி ஒவ்வாது **
ஒட்டுரைத்து இவ்வுலகு உன்னைப் * புகழ்வெல்லாம் பெரும்பாலும் *
பட்டுரையாய்ப் புற்கென்றே * காட்டுமால் பரஞ்சோதீ! 2

பரஞ்சோதி! நீ பரமாய் * நின் இகழ்ந்து பின் * மற்றோர்
பரஞ்சோதி இன்மையின் * படி ஓவி நிகழ்கின்ற **
பரஞ்சோதி நின்னுள்ளே * படர் உலகம் படைத்த * எம்
பரஞ்சோதி! கோவிந்தா! * பண்புரைக்க மாட்டேனே 3

மாட்டாதே ஆகிலும் * இம்மலர் தலை மா ஞாலம் * நின்
மாட்டாய மலர் புரையும் * திரு உருவம் மனம் வைக்க **
மாட்டாத பல சமய * மதி கொடுத்தாய் * மலர்த் துழாய்
மாட்டே நீ மனம் வைத்தாய் * மா ஞாலம் வருந்தாதே? 4

வருந்தாத அருந்தவத்த * மலர் கதிரின் சுடர் உடம்பாய் *
வருந்தாத ஞானமாய் * வரம்பின்றி முழுது இயன்றாய்! **
வருங்காலம் நிகழ் காலம் * கழி காலமாய் உலகை *
ஒருங்காக அளிப்பாய்! சீர் * எங்கு உலக்க ஓதுவனே? 5

ஓதுவார் ஒத்தெல்லாம் * எவ்வுலகத்து எவ்வெவையும் *
சாதுவாய் நின் புகழின் * தகை அல்லால் பிறிதில்லை **
போது வாழ் புனந்துழாய் * முடியினாய்! பூவின் மேல் *
மாது வாழ் மார்பினாய்! * என் சொல்லி யான் வாழ்த்துவனே? 6

வாழ்த்துவார் பலர் ஆக * நின்னுள்ளே நான்முகனை *
மூழ்த்த நீர் உலகெல்லாம் * படை என்று முதல் படைத்தாய்! **
கேழ்த்த சீர் அரன் முதலாக் * கிளர் தெய்வமாய்க் கிளர்ந்து *
சூழ்த்து அமரர் துதித்தால் * உன் தொல் புகழ் மாசூணாதே? 7

மாசூணாச் சுடர் உடம்பாய் * மலராது குவியாது *
மாசூணா ஞானமாய் * முழுதுமாய் முழுது இயன்றாய்! **
மாசூணா வான் கோலத்து * அமரர் கோன் வழிப்பட்டால் *
மாசூணா உன பாத * மலர்ச் சோதி மழுங்காதே? 8

மழுங்காத வைந்நுதிய * சக்கர நல் வலத்தையாய் *
தொழுங்காதல் களிறு அளிப்பான் * புள் ஊர்ந்து தோன்றினையே **
மழுங்காத ஞானமே * படையாக மலர் உலகில் *
தொழும்பு ஆயார்க்கு அளித்தால் * உன் சுடர்ச் சோதி மறையாதே? 9

மறை ஆய நால் வேதத்துள் நின்ற * மலர்ச் சுடரே! *
முறையால் இவ்வுலகெல்லாம் * படைத்து இடந்து உண்டுமிழ்ந்து அளந்தாய்! **
பிறை ஏறு சடையானும் * நான்முகனும் இந்திரனும் *
இறை ஆதல் அறிந்தேத்த * வீற்றிருத்தல் இது வியப்பே? 10

** வியப்பாய வியப்பில்லா * மெய்ஞ்ஞான வேதியனை *
சயப் புகழார் பலர் வாழும் * தடங்குருகூர் சடகோபன் **
துயக்கு இன்றித் தொழுது உரைத்த * ஆயிரத்துள் இப்பத்தும் *
உயக் கொண்டு பிறப்பறுக்கும் * ஒலி முந்நீர் ஞாலத்தே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---